**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.624/2018**

**Prosecution Witness : 7**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : மகேஷ் | **Caste** | : | |
| **Father's Name** | : ஜெயராமன் | **Calling** | : | காவல் ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : தேனி | **Age** | : | **44/2026** |
| | | **Dated** | : | **09.03.2026** |

**09.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 13 **திரு. மகேஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed. A3 இறப்பு.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனி PC பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 20.09.2018ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் 22.00 மணியளவில் திண்டுக்கல் பாதாள காளியம்மன் கோவில் தெருசைச்சேர்ந்த ஆனந்தகுமார் என்பவரின் மகன் எழில் அரசன் நிலையத் ஆஜராகிக்கொடுத்த புகாரைப்பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண். 842/2018 சட்டப்பிரிவுகள் 394 இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை**

**அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புகாரில் அ.சா.1 , அ.சா.2 ஆகியோர்களின் போன் நம்பர் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகன எண் குறித்து புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் அடையாளம், வயது குறித்தும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மோதிரம், செயின் அ.சா.2க்கு சொந்தமானது என்ற எந்த ஆவணமும் புகார் அளிக்கும்போது கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு புகாரில் சம்பவ நேரம் இரவு 01.30 மணி என தனியாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் அ.சா.1 இடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் 30 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 15 நாட்கள் காலதாமதமாக பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 கொடுத்த தவறான புகாரை வைத்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**
இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:57:08 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.624/2018**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சரவணக்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : முருகன் | **Calling** | : | பைனான்ஸ் ஊழியர் |
| **Village** | : **R.M** காலணி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **38/2026** |
| | | **Dated** | : | **09.03.2026** |

**09.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திரு. சரவணக்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 6** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed. A3 இறப்பு.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் R.M காலணியில் குடியிருந்து பைனான்ஸ் வேலை செய்துவருகிறேன். கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. பழனிரோடு காந்தி மார்கெட் வளைவில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே போலிசார் நின்று கொண்டிருந்தபோது நானும் மற்றொரு நபரும் அங்கு சென்றபோது போலிசார் ஒரு நபரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவர் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் பதிவு செய்து எங்களிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்.

பின்பு அவர் தங்க நகை மற்றும் மோதிரத்தை எங்கள் முன்னிலையில் போலிசாரிடம் எடுத்து ஒப்படைத்தார். அதற்கும் போலிசார் தனியாக எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 9 ஆகவும் அன்றைய தினம் தயாரிக்கப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்டுகிறது**. எதிரியை தற்போது நினைவில் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எதிரியைப்பார்ப்பதற்கு முன்பு எதிரி போலிசாரிடம் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அவரிடம் இருந்து என்ன வழக்குச்சொத்துகள் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் போலிசார் காவல் நிலையத்தில் வைத்துதான் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த அத்தாட்சியில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் மார்கெட் அருகில் வைத்து தான் நான் கையொப்பம் செய்தேன். போலிசார் எதிரியிடமிருந்து கைப்பற்றிய வழக்குச்சொத்துகளை பெட்டி தயார் செய்து அதில் வைத்து சீல் வைத்தார்களா என்றால் இல்லை.

போலிசார் எதிரியிடமிருந்து கைப்பற்றிய வழக்குச்சொத்துகளை என் முன்னிலையில் எடைப்பார்த்ததாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் என்னை சாட்சியாக இருக்குமாரு போன் மூலம் அழைத்தார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த இடத்திற்கு எதற்காக வந்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்தவித வழக்குச்சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. காவல் துறைக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:57:13 +0530

Judicial Magistrate No.II
Dindigul.